**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. D.V.C.No. 6/2025**

**Deposition of Witness for Complainant PW2**

| | | |
|---|---|---|
| **Name** | : | குமார் |
| **Father's Name** | : | கோபாலன் |
| **Village** | : | முருகன் காலனி |
| **Taluk** | : | கோத்தகிரி |
| **Calling** | : | டயர் ஒர்க்ஸ் |
| **Age** | : | 43 |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**16.07.2026** **Witness Signature :**

**எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை. இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**PW2 முதல் விசாரணை 05.07 P.M**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை எனக்குத் தெரியும். இருவருக்கும் கோத்தகிரியில் திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்து இருவரும் ராம்சந்தில் தனியாக குடியிருந்து வந்தார்கள். ஒரு நாள் மேட்டுப்பாளையத்தில் வைத்து எதிர்மனுதாரர் ஒரு பெண்ணின் கையை பிடித்து இழுத்து பிரச்சனை செய்ததால் மேட்டுப்பாளையம் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரரை வைத்திருந்தார்கள். அந்த சமயத்தில் நான்

ஊர்தலைவர் என்ற முறையில் சென்று பேசி சமாதானம் செய்து வைத்தேன்.

2. பிறகு இரண்டுநாள் கழித்து எதிர்மனுதாரர் காணாமல் போய்விட்டார். இது குறித்து மனுதாரர் கோத்தகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அந்த புகாரின் பேரில் என்னை அழைத்து விசாரித்து எதிர்மனுதாரர் எங்கே இருக்கிறார் என்று நான் போன் செய்து கேட்டபோது மேட்டுப்பாளையத்திற்கு வேலைக்கு சென்றுவிட்டு கோத்தகிரி வந்துகொண்டிருக்கிறேன் என்று கூறினார். பின்னர் நானும், எதிர்மனுதாரரின் அண்ணன் மற்றும் மாமா அவரை தேடிச் செல்லும்போது எதிர்மனுதாரர் மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்திற்கு எதிரில் உள்ள லாட்ஜ்ஜில் எதிர்மனுதாரர் ஒரு பெண்ணுடன் தங்கி இருந்தார்.

3. எதிர்மனுதாரருடன் இருந்த அந்த பெண்ணுக்கு தாலி கட்டி இருந்தார். விசாரித்தபோது அந்த பெண்ணுக்கு ஏற்கனவே திருமணமாகி 2 ஆண் குழந்தைகள் உள்ளார்கள் என தெரியவந்தது. அவர்களை அழைத்து வந்து கோத்தகிரி காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். காவல் நிலையத்தில் விசாரித்தபோது எதிர்மனுதாரர் வீட்டின் பத்திரத்தை ரூ. 2,00,000/- க்கு சரவணா பைனான்ஸில் அடகு வைத்ததை கொஞ்சம் கொஞ்சமாக பணம் கொடுத்து மனுதாரர் மீட்டு பள்ளிவாசலில் கொடுத்து வைத்திருப்பதாக தெரிந்துகொண்டேன். எதிர்மனுதாரர் கோத்தகிரி பேருந்து நிலையத்தில் வைத்து மனுதாரரின் அப்பாவை அடித்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் ம.த.சா.ஆ. 14ல் உள்ள பெண்தான் எதிர்மனுதாரர் தொடர்பில் உள்ள பெண்.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 16.07.2026
Judicial Magistrate,
Kotagiri